தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**6 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## எமது தாய்நாடு

தமிழீழம் எமது தாய்நாடு. இந்து மாகடல் தன் கைகளால் ஏந்தி நிற்கும் அழகான நாடு. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம் மாவட்டக் கரையோரம் தமிழர்களின் தொல்குடித் தாயகம்.

வீரத்தமிழ் மன்னர்களாம் எல்லாளனும் சங்கிலியனும் பண்டாரவன்னியனும் படைகட்டி ஆண்ட நிலம் தமிழீழம். தானைத் தலைவர் பிரபாகரன் மாமா பிறந்த பொன்னாடு. ஆயிரம் ஆயிரம் வீரமறவர்களின் துயில் இடங்களைத் தாங்கி நிற்கும் கருவறை.

மொழி, கலை, பண்பாடு, பொருண்மியம், கல்வி என மனித விழுமியங்கள் நிரம்பப் பெற்றது எங்கள் தாய்நாடு. நீர்வளம், நிலவளம், கனிமவளம், கடல்வளம் என நிறைந்த இயற்கை வளங்கள் கொண்டது எம் தாய்நாடு.

எமது தாய்நாட்டின் தலைநகரம் திருகோணமலை. இது இயற்கைத் துறைமுக நகரம் என்பதால் அனைத்துலக நாடுகளாலும் விரும்பப்பெறுகிறது.

இந்த நாடு எங்களின் சொந்த நாடு. ஆண்ட பரம்பரை நாங்கள் அல்லவா! அடுத்தவன் எம்மை ஆள நினைப்பதா?

எங்கள் தாய்நாட்டை மீட்க விடுதலைப்போர் நடாத்தியவர் எங்கள் தலைவர் மாமா. அவர் காட்டிய வழியில் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம். எமது தாய்நாட்டை மீட்போம்!

நன்றி,

வணக்கம்.